بسم اللہ الرحمن الرحیم — نحمدہ ونصلی علی رسولہ الکریم — وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4 | இதழ் 16

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

12 ஷஃபான் 1440 ஹிஜ்ரி கமரி 18 ஷஹாதத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

18 ஏப்ரல் 2019

## அல்லாஹ்வின் கட்டளை

فَقُلْ تَعَالَوْا نَدْعُ أَبْنَآءَنَا وَأَبْنَآءَكُمْ
وَنِسَآءَنَا وَنِسَآءَكُمْ وَأَنْفُسَنَا
وَأَنْفُسَكُمْ ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَلْ لَّعْنَتَ
اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ

நீர் கூறுவீராக! வாருங்கள்; நாங்கள் எங்களுடைய ஆண் மக்களையும், நீங்கள் உங்கள் ஆண் மக்களையும், நாங்கள் எங்கள் பெண்களையும், நீங்கள் உங்கள் பெண்களையும், நாங்கள் எங்களைச் சார்ந்தவர்களையும், நீங்கள் உங்களைச் சார்ந்தவர்களையும் அழைத்துக் கொள்வோம். பின்னர் உருக்கமாகப் பிரார்த்தனை செய்து, பொய்யர்களின் மேல் அல்லாஹ்வின் சாபம் என வேண்டுவோம். (3:62)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### 29 டிசம்பர் 2018

### இரண்டாவது நாளின் முதல் அமர்வு (சனிக்கிழமை)

இரண்டாவது நாளின் முதல் அமர்வு மதிப்பிற்குரிய செய்யது தன்வீர் அஹ்மது சாஹிப் (சத்ர் அஞ்ஜுமன் அஹ்மதிய்யா, இந்தியா) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. ஹாபிஸ் முஅல்லிம் அமான் அலி சாஹிப் அவர்கள் சூரா தக்வீரின் 1 முதல் 30 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய மவ்லவி ஜைனுத்தீன் ஹாமித் சாஹிப் (நாஸிம் தாருல் கஸா காதியான்) அவர்கள் படித்துக் காட்டினார்கள். பிறகு மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது சாஹிப் (உருது பத்ர் பத்திரிகையின் துணை ஆசிரியர்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதைகளை படித்துக் காட்டினார்கள்.

*தீன் கி நுஸ்ரத் கேலியே இக் ஆஸ்மான் பர் ஷோர் ஹே*

*அப் கயா வக்தே ஹஸா ஆயேஹே பல் லானேகா தின்*

பிறகு அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் (நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் காதியான்) அவர்கள், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஈமானுக்கு வலுவூட்டக்கடிய சம்பவங்கள் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் சில பகுதிகளை வாசகர்கள் முன் நாம் எடுத்து வைக்கின்றோம்.

2004–ஆம் ஆண்டு ஆப்ரிக்கா சுற்றுப் பயணத்தின்போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நைஜீரியாவிலிருந்து பெனின் சென்றார்கள். பள்ளிவாசலை அடைந்தபோது அஸர் நேரமாக இருந்தது. அப்போது அடை மழை பெய்து கொண்டிருந்தது. தொழுகைக்காக திண்ணையில் கூடாரம் போடப்பட்டிருந்தது. அது நான்கு பக்கமும் திறந்த வெளியாக இருந்தது. மழையின் காரணமாக அங்குத் தொழ முடியாமல் இருந்தது. இன்னும் சொல்வதென்றால், அங்கு நிற்பது கூட முடியாத காரியமாக இருந்தது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வெளியே வந்தார்கள். தொழுகையைக் குறித்து கேட்டார்கள். அதற்கு அமீர் சாஹிப் அவர்கள், இப்போது பெரும் மழை பெய்து கொண்டிருக்கிறது. தொழுகைக்காக வெளியே கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மழையின் காரணமாக மிகவும் கஷ்டமாக உள்ளது என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வானத்தைப் பார்த்தார். பத்து நிமிடம் கழித்துத் தொழுவோம் என்றார்கள். அதன் பின் அனைவரும் சென்று விட்டார்கள். இரண்டு மூன்று நிமிடங்கள் தான் கழிந்திருக்கும். திடீரென்று மழை நின்று விட்டது. வானம் தெளிவானது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே மெல்ல வெயில் தோன்ற ஆரம்பித்தது.

இந்த அடையாளத்தைக் கண்ட உள்ளூர் வாசிகள் மிகவும் ஆச்சரியம் அடைந்தனர். இந்தப் பகுதியில் மழை பெய்யத் தொடங்கினால் பல மணி நேரம் தொடர்ந்து பெய்து கொண்டே இருக்கும். ஹுஸூர் அவர்கள் பத்து நிமிடம் என்று கூறினார்கள்.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உமக்கு இறைவனது சுவர்க்கம் கிடைக்கும். அது இந்த அனைத்து வெகுமதிகளையும் விட மிகப்பெரிய வெகுமதியாகும்**

**நான் எனக்காக இதனை மட்டுமே விரும்புகின்றேன். அதாவது எவ்வாறு நீங்கள் உங்களது உறவினர்கள் மற்றும் அன்பிற்குரியவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றீர்களோ அவ்வாறே தேவைப்பட்டால் என்னுடனும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும்**

**கட்டுப்படுதல் மற்றும் விசுவாசத்தில் சிறந்து விளங்கிய பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் ஸம்ரா பின் அம்ர் ஜுஹனீ (ரலி), ஹஸ்ரத் சஅது பின் சுஹைல் (ரலி), ஹஸ்ரத் சஅது பின் உபைது (ரலி), ஹஸ்ரத் சஹல் பின் அதீக் (ரலி), ஹஸ்ரத் சுஹைல் பின் ராஃபி (ரலி), ஹஸ்ரத் சஅது பின் ஹைஸ்மா (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்புகள்**

**சஹாபாக்களின் வாழ்க்கையின் ஒளியில் இஸ்லாமிய வரலாற்றின் நடந்த சம்பவங்களான இரண்டாவது பைஅத்தே உக்பா மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த மஸ்ஜிது நபவி பள்ளிவாசலின் கட்டுமானப்பணி மற்றும் ஹஸ்ரத் சஅது பின் ஹைஸ்மா (ரலி) அவர்களின் ஷஹாதத் மற்றும் ஜிஸ்ர் போர் பற்றி குறிப்பு**

**அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15 மார்ச் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் இன்று எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது சாயிப் பின் உஸ்மான் (ரலி) ஆவார்கள். இவர் பனூ ஜமஹ் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் அவர்களின் மகனாவார். அன்னாரது தாயாரின் பெயர் ஹவ்லா பின்த் ஹகீம் ஆகும். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் ஆவார். ஹஸ்ரத் சாஹிப் பின் உஸ்மான் அவர்களுடைய தந்தை மற்றும் சிறிய தந்தை குதாமா ஆகியோருடன் இரண்டாம் முறையாக அபீஸீனியாவிற்கு இடம் பெயர்ந்தவர்களுள் இவர்களும் அடங்குவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் மற்றும் ஹாரிஸா பின் சுராக்கா அன்ஸாரி இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அம்பு எறியும் சஹாபாக்களில் ஒருவராக கூறப்படுகிறார். ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் பத்ர், உஹது, அகழ் போர் மற்றும் பிற போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 396,397 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 306,307 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 20 சாயிப் பின் உஸ்மான் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

புவாத் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். புவாத் போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு நடந்தது.

அதைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ரபீவுல் அவ்வலின் கடைசி நாட்களில் அல்லது ரபீவுல் ஆகிருடைய ஆரம்ப நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குரைஷிகளிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது. முஹாஜிரீன்களின் ஒரு கூட்டத்துடன் அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேறினார்கள்.

அப்போது மதீனாவிற்கு ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் அவர்களை அமீராக நியமித்தார்கள். குரைஷிகளுக்கு இது தெரியாது. அவர்கள் புவாத் வரை சென்று பிறகு திரும்பி விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 329)

புவாத் என்பது மதீனாவிலிருந்து 48 மைல் தொலைவிலுள்ள ஒரு ஜுஹைனா என்ற மலைப் பகுதியாகும்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 15 பாப் ஃபீ கஸ்வா பவாத் – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சாயிப் பின் உஸ்மான் யமாமா போரில் கலந்து கொண்டார்கள். யமாமா போர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அதாவது ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் அவர்களுக்கு ஒரு அம்பு பட்டது. அதன் விளைவாக பின்னாள் அவர்கள் மரணமடைந்தார்கள். அவர்களது வயது 30 ஐ விடச் சற்று அதிகம்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 307 சாயிப் பின் உஸ்மான் பின் மழ்வூன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஸம்ரா பின் அம்ர் ஜுஹனீ ஆகும். ஹஸ்ரத் ஸம்ரா அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் அமர் பின் அதீ ஆகும். மற்றும் சிலர் இவரது பெயரை மாற்றியும் கூறியுள்ளார்கள். சிலர் பிஷ்ர் என்று கூறுகிறார்கள். இவர் பனூ தரீஃபுடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார். சிலரது கருத்தின்படி இவர் பனூ சாயிதாவின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார். அது சஅது பின் உபாதாவின் கோத்திரமாகும். அதாவது இரு கோத்திரத்திற்குமிடையில் எங்களுக்கு தேவைப்பட்டால் நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் உங்களுக்கு தேவைப்பட்டால்

நாங்கள் உதவி செய்வோம் என்றும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் அப்துல் காபாவில் எழுதுகிறார்கள்: அதில் எந்த முரண்பாடும் இல்லை. பனூ தரீஃப் என்பது பனூ சாயிதாவின் ஒரு கிளையாகும். ஹஸ்ரத் ஸம்ரா பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார். உஹது போரில் ஷஹீதானார்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 60,61 ஸம்ரா பின் அம்ர் ஜுஹனீ – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி சஅது பின் சுஹைல் ஆவார்கள். சஅது அன்ஸார்களில் ஒருவர் ஆவார். பிறகு இவரை சயீது பின் சுஹைல் என்றும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் சஅது பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார். அவரது ஒரு மகள் உஸைலா ஆவார். இவரைப் பற்றி இவ்வளவுதான் கூறப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 439 சஅது பின் சுஹைல் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 395 சயீது பின் சுஹைல் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி சஅது பின் உபைது ஆகும். இவரும் ஒரு பத்ர் சஹாபியாவார். இவரைப் பற்றி கூறுகின்றேன். ஹஸ்ரத் சஅது பின் உபைது பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். அவரது பெயர் சயீது என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் காரி என்ற பெயரில் பிரபல்யமானார். அவரது சுட்டுப்பெயர் அபூ ஸயீது ஆகும். சஅது பின் உபைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் திருக்குர்ஆனைத் தொகுத்த நால்வரில் ஒருவர் ஆவார். அவரது மகன் உமைர் பின் சஅது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் சிரியாவின் ஒரு பகுதியில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் சஅது பின் உபைது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் மஸ்ஜிது கபாவில் தொழுகை நடத்தி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்திலும் இந்தப் பணியைச் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் உபைது அவர்கள் ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு காதிஸிய்யா போரில் ஷஹீதானார்கள். அப்போது அவர்களுக்கு வயது 64 ஆகும்.

அப்துர் ரஹ்மான் பின் லைலா அவர்கள் அறிவிப்பின்படி ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜிஸ்ர் போரில் சஅது பின் உபைது தோல்வியுற்றவாறு திரும்பினார். அந்த போரில் முஸ்லிம்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டிருந்தது. பின்வாங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஅது பின் உபைது அவர்களிடம், சிரியா நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யுத்தம் செய்வதற்கு உமக்கு விருப்பம் இருக்கிறதா? என்று கேட்டார்கள்.

அங்கு முஸ்லிம்களுக்கு கடும் இரத்த சேதம் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே உங்களுக்கு ஆர்வம் இருந்தால் அங்கு செல்லுங்கள். எதிரிகள் தமது இரத்தவெறியினால் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். எதிரிகள் துணிச்சலாக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம், நீர் உம்மீது ஏற்பட்டுள்ள கெட்ட பெயரின் கறையைத் துடைக்க விரும்பினால் அதாவது ஜிஸ்ர் போரில் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டபோது நீர் புறமுதுகுக்காட்டி அதனால் ஏற்பட்ட கெட்ட பெயரைத் துடைக்க விரும்பினால் சிரியாவில் சண்டை நடக்கிறது. சென்று கலந்து கொள்ளலாம் என்று கூறினார்கள்.

அதற்கு சஅது அவர்கள், இல்லை. நான் ஓடிவந்த அந்த இடத்தைத்தவிர வேறு எங்கும் செல்ல மாட்டேன். அந்த எதிரிகளை நோக்கியே செல்வேன். அதாவது எதிரிகள் எந்த இடத்தில் என்மீது அவர்கள் செய்ய விரும்பியதைச் செய்தார்களோ என்னை அவர்கள் வெற்றி கொண்ட இடத்திற்கே செல்வேன் என்று கூறியவாறு சஅது காதிஸிய்யா சென்றார். அங்கு சண்டையிட்டவாறு ஷஹீதானார்.

அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சஅது பின் உபைது மக்களிடம் உரத்த குரலில் கூறினார்: நாம் நாளை எதிரிகளைச் சந்திப்போம். நாளை நாம் ஷஹீதாவோம். நீங்கள் நம்முடைய உடலிலுள்ள இரத்தத்தை கழுவவும் வேண்டாம். நமது உடலிலுள்ள உடைகளை நீக்கி வேறு உடையை அணிவிக்கவும் வேண்டாம்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 2 பக்கம் 445 சஅது பின் உபைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 349 சஅது பின் உபைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 57 சஅது பின் உபைது – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜஸ்ர் போர் குறித்து கடந்த குத்பாக்களில் நான் கூறியிருந்தேன். அந்த அடிப்படையில் ஒரு சில விஷயங்களைக் கூறுகின்றேன். நான் ஏற்கனவே கூறியது போன்று ஜஸ்ர் போர் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஃபராத் என்ற நதிக்கரையில் முஸ்லிம்களுக்கும் ஈரானியர்களுக்கும் இடையில் நடந்தது. முஸ்லிம்களின் தரப்பில் இராணுவத் தளபதியாக அபூ உபைது சக்ஃபி இருந்தார்கள். ஈரானிகளின் தரப்பில் பக்மன் ஜாதிவிய்யா என்பவர் தளபதியாக இருந்தார்.

முஸ்லிம்களின் எண்ணிக்கை 10,000 ஆக இருந்தது. ஈரானியர்களின் எண்ணிக்கை 30,000 ஆக இருந்தது. 300 யானைகளும் இருந்தன. ஃபராத் நதிக்கரையில் இரு புறமும் படைகள் நின்று கொண்டிருந்தன. நதி நடுவில் இருந்தது.

எனவே இரு பிரிவும் சிறிது காலம் சண்டையை நிறுத்தி விட்டு ஒருமித்த கருத்துடன் ஒரு பாலத்தை உருவாக்கினார்கள். இதனால் இது ஜிஸ்ர் போர் என்று அழைக்கப்பட்டது. அந்த பாலம் உருவாக்கப்பட்ட பிறகு பக்மன் ஜாதிவிய்யா அபூ உபைதிவிடம், நீங்கள் பாலத்தை கடந்து வருகின்றீர்களா? அல்லது எங்களுக்கு அனுமதி தருவீர்களா? என்று கேட்டனுப்பினார். அதற்கு ஹஸ்ரத் அபூ உபைதாவின் கருத்து, முஸ்லிம்களின் படை ஆற்றைக் கடந்து எதிரிகளிடம் சண்டையிட வேண்டும் என்பதாக இருந்தது. படையின் தலைவராக ஹஸ்ரத் சுலைத் இருந்தார்.

அவர் இக்கருத்திற்கு எதிராக இருந்தார். ஆனால் ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் ஃபராத் நதியைக் கடந்து ஈரானியப் படையைத் தாக்கினார். சிறிது நேரத்திற்கு சண்டை அவ்வாறே நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிறகு பஹ்மத் ஜாதுவிய்யா தன்னுடைய படை சிதறி ஓடக் கண்டார். ஈரானிகளின் படை பின்வாங்குவதைப் பார்த்ததும் தன்னுடைய யானைகளை முற்படுத்துமாறு கட்டளையிட்டார். யானைகள் முன்பக்கத்திற்கு வந்ததும் முஸ்லிம்களின் அணி சீர்குலைந்தது. இஸ்லாமியப் படை அங்கும் இங்குமாக சிதறியது.

ஹஸ்ரத் அபூ உபைது முஸ்லிம்களிடம், அல்லாஹ்வின் அடியார்களே! யானைகளைத் தாக்குங்கள். அவற்றின் துதிக்கைகளை வெட்டுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ உபைது இதைக் கூறியவாறு முன்னே சென்றார். ஒவ்வொரு யானையாகத் தாக்கி அவற்றின் துதிக்கைகளை வெட்டிப் போட்டார். அதைப் பார்த்து மற்ற படைகளும் விரைவாக சண்டையை தொடங்கின. பல யானைகளின் துதிக்கைகளும் கால்களும் வெட்டப்பட்டு அதில் சவாரி செய்தவர்களும் கொல்லப்பட்டனர்.

தற்செயலாக ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் ஒரு யானையின் முன்னே வந்தார். அவர் அந்த யானையின் துதிக்கையை வெட்டினார். அவர் அந்த யானையின் காலுக்குக் கீழ் வந்து விட்டார். அதனால் நசுக்கப்பட்டு ஷஹீதனார். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு 7 பேர் அடுத்தடுத்து இஸ்லாமிய கொடியைத் தாங்கியவாறு சண்டையிட்டு ஷஹீதானார்கள். எட்டாவது மனிதர் ஹஸ்ரத் மஸ்மா என்பவராக இருந்தார்.

அவர் இஸ்லாமியக் கொடியை எடுத்துக் கொண்டு மீண்டும் ஒரு ஆவேசமான தாக்குதல் தொடுக்க நினைத்தார். ஆனால் இஸ்லாமிய படையின் அணி குலைந்தது. மக்கள் தொடர்ந்து ஏழு அமீர்கள் ஷஹீதாவதைக் கண்டு அங்கும் இங்கும் ஓடத் தொடங்கினர். சிலர் ஆற்றில் குதித்தனர். ஹஸ்ரத் மஸ்மா மற்றும் அவருடன் இருந்தவர்கள் ஆண்மையுடன் சண்டையிட்டனர். இறுதியில் ஹஸ்ரத் மஸ்னா காயமுற்றார். சண்டையிட்டுக் கொண்டே ஃபராத் நதியில் புகுந்து திரும்பி வந்து விட்டார். இந்த சம்பவம் முஸ்லிம்களிடம் கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியது. முஸ்லிம்களில் 4000 பேர் ஷஹீதானார்கள். அதே வேளையில் ஈரானியர்களில் 6000 பேர் கொல்லப்பட்டனர்.

(ஹகீம் அஹ்மது ஹுஸைன் ஆலாபாதி அவர்கள் எழுதிய தாரீக் இப்னு ஹல்தூன் என்ற நூல் தொகுதி 3 பக்கம் 270–273 – 2003 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஈரானியர்கள் தரப்பிலிருந்து மீண்டும் மீண்டும் தாக்குதல் தொடுக்கப்பட்டதால் அவர்களின் தாக்குதலை நிறுத்துவதற்காக இந்தச் சண்டைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சஹல் பின் அதீக் ஆவார்கள். இவரது பெயர் சஹைல் என்றும் கூறப்படுகின்றது. இவரது தாயார் பெயர் ஜமீலா பின்த் அலக்மா ஆகும். ஹஸ்ரத் சஹல் பின் அதீக் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்ட 70 அன்ஸார்களில் ஒருவர் ஆவார். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேறு பெற்றிருந்தார்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 578 சஹல் பின் அதீக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 387 சஹல் பின் அதீக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி பற்றிய குறிப்பு ஹஸ்ரத் சுஹைல் பின் ராஃபி பற்றியதாகும். ஹஸ்ரத் சுஹைல் அவர்கள் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். மஸ்ஜிது நபவி இவரது மற்றும் அவருடைய சகோதரர் ஹஸ்ரத் சஹல் பின் முல்கிய்யத் ஆகிய இருவருடைய நிலத்தில்தான் கட்டப்பட்டது. அவருடைய தாயார் பெயர் ஸஹீபா பின்த் சஹல் ஆகும். ஹஸ்ரத் சுஹைல் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் வஃபாத்தானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 372 சுஹைல் பின் ராஃபி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்தூது (ரலி) அவர்கள் எழுதியதை எடுத்து வைக்கின்றேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: அன்னார் மதீனாவில் நுழைந்தபோது ஒவ்வொருவரது விருப்பமும் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் தங்க வேண்டும் என்பதாக இருந்தது. எந்த எந்த வீதிகளில் எல்லாம் அவர்களது ஒட்டகம் கடந்து சென்றதோ அந்த அந்த வீதிகளிலெல்லாம் பல்வேறு வீட்டினர் தம்முடைய வீட்டின் முன் நின்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்றனர். யா ரஸூலல்லாஹ்! இது எங்களது வீடு. இவை எங்களது பொருள்கள். இவை எங்களது கால்நடைகள். இவை அனைத்தும் உங்களது சேவைக்காக இருக்கின்றன. அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்களைப் பாதுகாக்கத் தகுதியானவர்கள். நீங்கள் எங்களுடைய வீடுகளில் தங்குங்கள் என்று கூறினர்.

இன்னும் ஒரு சிலர் உத்வேகத்துடன் முன்னே வந்து அன்னாரின் ஒட்டகத்தின் கயிற்றைப் பற்றிப் படித்தவாறு தங்களுடைய வீட்டிற்குள் அதனைக் கொண்டு செல்ல முயன்றனர். ஆனால் அன்னார் ஒவ்வொருவருக்கும் எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இன்று இறைவன் புறமிருந்து இது கட்டளையிடப்பட்டுள்ளது. அல்லாஹ் எங்கு விரும்புகின்றானோ அங்கு இந்த ஒட்டகம் அமர்ந்து விடும். இறைவன் விரும்பும் இடத்திலேயே அது நிற்கும் என்றே அவர்களுக்கு அன்னார் பதில் கூறினார்கள்.

இறுதியில் மதீனாவில் ஒரு பகுதியில் பனூ நஜ்ஜாரைச் சார்ந்த அனாதைகளின் ஒரு நிலத்தில் அந்த ஒட்டகம் வந்து நின்றது. அன்னார் கூறினார்கள்: இறைவனுடைய விருப்பம் நான் இங்கு தங்க வேண்டும் என்பதாகும். இந்த நிலம் யாருடையது? என்று கேட்டார்கள். அந்த நிலம் சில அனாதைகளுக்குரியதாக இருந்தது. அவர்களின் பாதுகாவலர் முன்னே வந்து அல்லாஹ்வின் தூதரே! இந்த நிலம் இன்னின்ன அனாதைகளுக்குரியது. மேலும் இவை உங்களின் சேவைக்காகத் தயாராக இருக்கின்றது என்று கூறினார். அன்னார் கூறினார்கள்: நாம் எவரது சொத்தையும் இலவசமாக வாங்க முடியாது. இறுதியில் அதனுடைய விலை நிர்ணயிக்கப்பட்டது. அன்னார் அந்த இடத்தில் மஸ்ஜிது மற்றும் தம்முடைய வீட்டை உருவாக்குவதற்கு முடிவு செய்தார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் – அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 228)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இதன் விளக்கத்தை சீரத் காத்தமுன் நபிய்யீனில் சிறிது எழுதியுள்ளார்கள்:

மதீனாவில் அன்னாரது முதன் பணியாக மஸ்ஜிது நபவியின் நிர்மாணமே இருந்தது. அவர்கள் ஒட்டகம் அமர்ந்த இடம் மதீனாவின் இரு முஸ்லிம் சிறுவர்களான சஹல் மற்றும் சுஹைல் ஆகியோருக்கு உரியதாக இருந்தது. ஹஸ்ரத் அஸ்அது பின் ஸிராரா அவர்கள் கண்காணிப்பாளராக இருந்தார். இது ஒரு குடியிருப்பற்ற பகுதியாக இருந்தது. சில பேரீச்ச மரங்கள் இருந்தன. உகாது என்ற மரங்களும் இருந்தன. இன்னொரு பகுதியில் சில இடிந்த பகுதிகளும் இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைப் பள்ளி மற்றும் தம்முடைய தங்கும் அறைகளை உருவாக்க விரும்பினார்கள். அதனை பத்து தினார் கொடுத்து வாங்கப்பட்டது. அது வாங்கி அதிலுள்ள மரங்களை வெட்டி மஸ்ஜிது நபவியின் நிர்மாணப்பணி தொடங்கியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 269)

ஓர் அறிவிப்பின்படி, அந்த தொகையை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் வழங்கினார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 186 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு எழுதுகின்றார்கள்: இடத்தை வாங்கி மரங்களை வெட்டி மஸ்ஜிது நபவியின் நிர்மாணம் தொடங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே துஆ செய்தவாறு அடிக்கல் நாட்டினார்கள். குபா மஸ்ஜிதில் நடந்ததைப் போன்று சஹாபாக்கள் கட்டுமான வேலைகளிலும், கூலி வேலைகளையும் செய்தார்கள். அவ்வப்போது பெருமானார் (ஸல்) அவர்களும் அப்பணிகளில் பங்கெடுத்தார்கள். சில நேரங்களில் கற்களைச் சுமந்தவாறு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அன்ஸாரி என்ற சஹாபி ஓர் கவிதையைப் பாடினார்.

هَذَا الْحِمَالُ لَا حِمَالَ خَيْبَر، هَذَا أَبَرُّ رَبَّنَا وَأَطْهَرُ

அதாவது இந்தச் சுமை கைபரில் வியாபாரப் பொருட்களின் சுமையல்ல. கால்நடைகளின் மீது வைக்கப்படுகின்ற சுமைகளைப் போன்றதல்ல. எங்களது எஜமானரே! இந்தச் சுமை இறையச்சம் மற்றும் தூய்மையின் சுமையாகும். இதனை உங்களுடைய திருப்திக்காக சுமக்கின்றோம்.

மேலும் அவ்வப்போது சஹாபாக்கள் பணி செய்தவாறு அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் இந்த கவிதையைப் படித்தார்கள்.

اَللّٰهُمَّ اِنَّ الْاَجْرَ اَجْرُ الْاٰخِرَه، فَارْحَمِ الْاَنْصَارَ وَالْمُهَاجِرَه

அதாவது எங்கள் அல்லாஹ்வே! உண்மையான கூலி ஆகிரத்தின் கூலியே ஆகும். நீ உனது அருளால் அன்ஸார் மற்றும் முஹாஜிர்களுக்கு உன்னடைய ரஹ்மத்தை இறக்குவாயாக.

சஹாபாக்கள் இந்தக் கவிதையைப் படித்தார்கள். அல்லது இந்த கவிதைகளைப் படித்தார்கள். சில நேரங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த குரலோடு சேர்த்து தம்முடைய குரலையும் இணைத்தார்கள். இவ்வாறு ஒரு நீண்ட முயற்சிக்குப் பிறகு பள்ளி முழுமையடைந்தது. பள்ளியின் கட்டுமானம் கற்கள் மற்றும் செங்கள்களாலும் மரக்கட்டைகளாலும் அமைக்கப்பட்டிருந்தது. அக்காலத்திலுள்ள நடைமுறைக்கேற்ப கட்டடத்தின் உறுதித்தன்மைக்காக மரக்கட்டைகளாலான தூண்களை நிறுத்தி அதற்கு மேல் சுவர்களையும் செங்கல் மற்றும் மண்ணையும் கொண்டு அமைக்கப்பட்டது. உறுதிப்பாட்டிற்காக இவ்வாறு செய்யப்பட்டது.

இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. கூரைக்காக பேரீச்சம் மரத்தின் கிளைகள் போடப்பட்டது. பள்ளிக்குள் கூரையைத் தாங்குவதற்காக பேரீச்சம் மரங்களைக் கொண்ட தூண்களும் நிறுத்தப்பட்டன. சொற்பொழிவு மேடை அமைக்கப்படாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தூண்களின் மீது சாய்ந்தவாறு குத்பா கொடுத்து வந்தார்கள். பள்ளியின் தரை செப்பனிடப்படாமல் இருந்தது. அதிக மழை பெய்யும்போது கூரையிலிருந்து தண்ணீர் சொட்டியது.

எனவே அதுபோன்ற நேரங்களில் தரையில் சேறு உருவாகியது. இந்த கஷ்டத்தைப் பார்த்து பிறகு சிறு கற்கள் பதிக்கப்பட்ட தரை உருவாக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் பள்ளியின் திசை பைத்துல் முகத்தஸை நோக்கி இருந்தது. ஆனால் கிப்லா மாற்றப்பட்டபோது திசை மாறியது. அகலம் 105 அடியாகவும் நீளம் 105 அடியாகவும் இருந்தது.

சுருக்கமாக 90 அடி அளவு இருந்தது. பிறகு அது விரிவாக்கம் செய்யப்பட்டது. 105 அடி மற்றும் 90 அடி கொண்ட இடமாக அது இருக்கிறது. கிட்டத்தட்ட 1500, 1600 தொழுகையாளிகள் தொழுவதற்குப் போதுமானதாக இருந்தது. பள்ளியின் ஒரு ஓரத்தில் ஒரு திண்ணை அமைக்கப்பட்டது. அதனை சுஃப்பா என்று அழைத்தனர். அதில் வீடற்ற ஏழை முஹாஜிரீன்கள் தங்கினர். அவர்கள் திண்ணைத் தோழர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அவர்களின் பணி இரவும், பகலும் பெருமானார் (ஸல்) அவர்களின் அருகில் இருப்பதும், இபாதத் செய்வதும், திருக்குர்ஆன் ஓதுவதுமாக இருந்தது. அவர்களுக்கு நிரந்தரமான வருவாய் இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களே அம்மக்களைக் கவனித்து வந்தனர். அன்னாருக்கு ஏதாவது அன்பளிப்பு வந்தால் அல்லது அவர்களது வீட்டில் ஏதாவது இருந்தால் இம்மக்களுக்காகவும் ஒரு பகுதியை ஒதுக்கினார்கள்.

உண்ணல் குடித்தல் ஆகியவற்றையும் பெரும்பாலும் பெருமானார் (ஸல்) அவர்களே அவர்களுக்காக தந்தார்கள். சில வேளைகளில் அன்னார் தாம் பட்டினியாகவும் இருந்தார்கள். தம் வீட்டிலுள்ளதை அந்தத் திண்ணைத் தோழர்களுக்காக அனுப்பி வைத்தார்கள். அன்ஸார்கள் அவர்களுக்கு முடிந்த வரை விருந்தோம்பல் செய்தார்கள். பேரீச்சம் பழ கொத்துகளைக் கொண்டு வந்து பள்ளியில் கட்டி வைத்தார்கள்.

ஆனால் இவ்வளவுக்குப் பிறகும் அவர்களின் நிலை நெருக்கடியாகவே இருந்தது. பல வேளைகளில் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது. இந்த நிலை பல வருடங்கள் நீடித்தது. மதீனாவில் குடியிருப்புகளின் விரிவாக்கத்தினால் சிலருக்குப் பணி கிடைத்தது. கூலி வேலை கிடைத்தது. சிலர் சமுதாயத்தின் பைத்துல் மாலிலிருந்து நிதி உதவி பெற்றனர். நிலைமை சற்று மேம்பட்டதும் அவர்களுக்கு உதவி கிடைத்தது. பள்ளிவாயிலை ஒட்டி பெருமானார் (ஸல்) அவர்களுடைய இருப்பிடமும் உருவாக்கப்பட்டது.

இருப்பிடம் என்றால் என்ன? ஒரு 10, 15 அடி கொண்ட சிறிய அறை. அந்த அறைக்கும் பள்ளிக்கும் இடையில் ஒரு வாசல் இருந்தது. அதன் வழியாக நுழைந்து அன்னார் தொழுகைக்காகப் பள்ளிக்கு சென்று வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மேலும் திருமணங்கள் செய்தபோது இந்த அறையை ஒட்டி சில அறைகள் உருவாக்கப்பட்டன. பள்ளியைச் சுற்றி ஹாபாக்களின் வீடுகள் உருவாகின. இதுவே மதீனாவில் உருவாகிய மஸ்ஜிது நபவி ஆகும்.

அப்போது சமுதாயப் பணிகளை செய்யத்தக்க ஒரு பொதுவான இடம் இருக்கவில்லை. எனவே அரசுப் பணிகள் செய்யுமிடமாகவும் பள்ளியே இருந்தது. அதுவே அலுவலகமாகவும் இருந்தது. அரசின் தலைமைச் செயலகமாகவும் இருந்தது. இதுவே பெருமானார் (ஸல்) அவர்களின் சபையாகவும் இருந்தது. எல்லா விதமான ஆலோசனைகளும் அங்கு செய்யப்பட்டன. அங்குதான் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அங்கிருந்துதான் கட்டளைகள் வெளியிடப்பட்டன.

அங்குதான் விருந்தோம்பலும் செய்யப்பட்டது. அதுவே பள்ளியாகவும் இருந்தது. சமுதாயப் பணிகளும், பள்ளியின் வேலையும் அங்கேயே செய்யப்பட்டது. போர்க் கைதிகளின் சிறைக் கூடமாகவும் இருந்தது. அவ்வாறு வந்த கைதிகளில் பலர் முஸ்லிம்களைப் பார்த்து அவர்களுடைய வணக்க வழிபாட்டினைப் பார்த்து அவர்கள் தமக்குள் இருந்த அன்பு நேசத்தைப் பார்த்து முஸ்லிமாகினர்.

எவ்வாறிருப்பினும் இதைப் பற்றி சர் வில்லியம் மூர் குறிப்பிடுகிறார். அவர் கிழக்கத்திய வரலாறை எழுதும் ஒரு மேற்கத்திய எழுத்தாளர் ஆவார். அவர் நிறைய மாற்றமாகவும்

எழுதியுள்ளார். இஸ்லாத்திற்கு எதிராகவும் எழுதியிருக்கிறார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் எழுதியிருக்கிறார். ஆனால் இங்கு அவர் எழுதுகிறார்: இந்தப் பள்ளி கட்டப்பட்ட விதத்தைப் பார்க்கும்போது மிக எளிமையானது; சாதாரணமானது. ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களின் இந்தப் பள்ளி இஸ்லாமிய வரலாற்றில் ஒரு சிறப்பான மகத்துவத்தைக் கொண்டுள்ளது. அல்லாஹ்வின் தூதரும் அவரது சஹாபாக்களும் அந்தப் பள்ளியில் தமது பெரும்பாலான நேரங்களைச் செலவிட்டனர். அங்கேயே இஸ்லாமிய தொழுகை முறைப்படியும் கூட்டாகவும் ஆரம்பமானது.

எல்லா முஸ்லிம்களும் ஜுமுஆ நாளில் தம்முடைய இறைவனின் அப்போதைய புத்தம் புதிய வஹியை கேட்பதற்காகவும், பேணுதலுடனும், பக்தியுடனும் அங்கு ஒன்று கூடினர். முஹம்மது (ஸல்) அவர்கள் தம்முடைய வெற்றிகளின் தீர்மானங்களை அங்கேயே எடுத்தார்கள். அந்த மாளிகையில்தான் வெற்றி கொள்ளப்பட்ட மற்றும் கோத்திரத்தாரின் கூட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சபையில்தான் அரசாங்க சட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அந்த சட்டங்களோ அரபுகளில் தொலை தூரப் பகுதியிலிருந்த எதிரிகளை அச்சமூட்டியது.

இறுதியில் இந்த பள்ளியில் அருகில்தான் தம்முடைய மனைவி ஆயிஷாவின் அறையில்தான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தன்னுடைய உயிரை வழங்கினார்கள்.

இதே இடத்தில்தான் அவருடைய இரண்டு கலீஃபாக்களும் அவருடைய இரு விலாப்புறங்களிலும் அடக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பள்ளி மற்றும் அவர்களுடைய அந்த அறைகள் கிட்டத்தட்ட ஏழு மாதத்தில் தயாராகி இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய புதிய இடத்திற்கு தம்முடைய மனைவி ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுடன் சென்றார்கள். மேலும் முஹாஜிரீன் மற்றும் அன்ஸார்களும் இடம் வாங்கி பள்ளிக்கு அருகிலேயே தமது வீடுகளை உருவாக்கினர். பள்ளிக்கு அருகில் எவர்களுக்கு இடம் கிடைக்கவில்லையோ அவர்கள் சற்று தூரத்தில் தமது வீடுகளை அமைத்தனர். சிலருக்கு அன்ஸார்களின் தரப்பிலிருந்து உருவாக்கப்பட்ட வீடுகளே கிடைத்தன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 269–271)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் சுஹைல் மற்றும் அவருடைய சகோதரர் ஆகியோர் நற்பேறு பெற்றவர்களாக இருந்தனர். அவர்களுக்கு இஸ்லாத்தின் அந்த மகத்தான தலைமையகத்திற்காகத் தமது நிலத்தை வழங்கும் வாய்ப்பு கிடைத்தது.

பிறகு நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் சஅது பின் ஹைஸ்மா ஆவார்கள். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னாரது தாயார் பெயர் ஹிந்து பின்த் அவ்ஸ் ஆகும். ஹஸ்ரத் அபூ லியாஹ் பின் நுஃமான் பின் சாபித் என்பவர் பத்ர் சஹாபி ஆவார்கள். அவருடைய தாய்வழிச் சகோதரர் ஆவார். அவரது சுட்டுப்பெயர் அபூ ஹைஸ்மா என்றும் அபூ அப்துல்லாஹ் என்றும் கூறப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅது பின் ஹைஸ்மா மற்றும் ஹஸ்ரத் அபூ சலமா பின் அப்துல் அஸது இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 429 சஅது பின் ஹைஸ்மா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 366,367 சஅது பின் ஹைஸ்மா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅது அவர்கள் செய்திகளைக் கொண்டு சேர்க்கக்கூடிய 12 நபர்களில் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது பைஅத்தே உக்பாவின்போது முஸ்லிம்களின் கண்காணிப்பாளராக இவர்களை நியமித்தார்கள்.

12 கண்காணிப்பாளர்கள் எவ்வாறு நியமிக்கப்பட்டார்கள்? அதன் விவரம் என்ன? அந்த கண்காணிப்பவரின் பெயர்கள் மற்றும் பெயர்கள் குறித்து சீரத் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

நுபுவ்வத்தின் 13 ஆம் ஆண்டில் துல் ஹஜ் மாதத்தில் ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த பல நூறு பேர் மக்காவிற்கு வந்திருந்தார்கள். அவர்களில் 70 பேர் முஸ்லிமாகி இருந்தனர். அல்லது அவர்கள் முஸ்லிமாக இருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களைச் சந்திப்பதற்காக மக்காவிற்கு வந்திருந்தனர். முஸ்அப் பின் உமைர் அவர்களுடன் வந்திருந்தார். முஸ்அப் அவர்களின் தாய் உயிரோடிருந்தார். இணை வைப்பவராக இருந்தார்.

ஆனால் அவர் மீது அந்த பெண்ணுக்கு அன்பு இருந்தது. முஸ்அப் வருகின்ற செய்தி தெரிந்ததும் அப்பெண் என்னை வந்து முதலில் நீ சந்திக்க வேண்டும் பிறகு நீ வேறு இடத்திற்குச் செல் என்று கூறி அனுப்பினார். முஸ்அப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்தித்து விட்டுப் பிறகு நான் உம்மைப் பார்க்க வருவேன் என்று பதில் கூறினார். இந்த வகையில் அவர் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்தித்து விட்டு தம்முடைய அசல் நிலைமைகளைக் கூறி விட்டு பிறகு தன் தாயிடம் சென்றார். அந்தப் பெண் கடும் கோபத்துடன் இருந்தார். அவரைப் பார்த்து அழுதாள். முறையீடு செய்தாள்.

முஸ்அப் அவர்கள், அம்மா! நான் உமக்கு ஒரு நல்ல விஷயத்தைக் கூறுகின்றேன். அது உமக்கு பயனுள்ளது. அதன் மூலமாக எல்லா பிரச்சனைகளும் தீரவும் செய்யும் என்று கூற அந்தப் பெண் அது என்ன விஷயம்? என்றுகேட்டார். அதற்கு முஸ்அப் அவர்கள் மெதுவாக, உன்னுடைய சிலை வணக்கத்தை விட்டு விட்டு முஸ்லிமாகி விடு. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள் என்றார்கள். அவர் கடுமையான இணை வைப்பவராக இருந்தார். இதனைக் கேட்டு கூச்சலிட்டார்.

நட்சத்திரங்களின் மீது ஆணையாக! நான் உம்முடைய மார்க்கத்திற்கு ஒருபோதும் வர மாட்டேன் என்று கூறியவாறு தம்முடைய உறவினர்களிடம் முஸ்அபைக் கைது செய்யுமாறு சைகை செய்தாள். ஆனால் அவர் ஓடி விட்டார்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முஸ்அப் மூலமாக அன்ஸார்களின் வருகையைப் பற்றிய செய்தி கிடைத்தது. அவர்களுள் சிலர் தனிப்பட்ட முறையிலும் அன்னாரைச் சந்தித்திருந்தார்கள். அக்காலத்தில் தனிப்பட்ட முறையில் ஒட்டுமொத்தமாக எல்லோரும் சந்திக்க வேண்டிய தேவை இருந்தது.

அதாவது ஹஜ்ஜை முடித்த பிறகு துல்ஹஜ் மாதத்தினுடைய நடுப்பகுதியின் தேதி நிர்ணயிக்கப்பட்டது. அந்த நாளின் நள்ளிரவில் அனைவரும் ஓர் மலைக்குன்றின் அருகில் அன்னாரைச் சந்திக்க வேண்டும். மன நிறைவோடு தனிப்பட்ட முறையில் அனைவரும் ஒன்றுசேர்வதற்காகவும் இவ்வாறு செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களிடம் ஒன்று சேர்ந்து வராதீர்கள்.

மாறாக, எதிரிகளின் பார்வை உங்கள மீது படாமல் இருப்பதற்காக ஒன்றிரண்டு நபர்களாக வாருங்கள் என்றார்கள். குறிப்பிட்ட நேரத்தில் அங்கு வந்து ஒன்றுசேர்வதற்கும் இவ்வாறு கூறினார்கள்.

ஒருவர் தூங்கி விட்டார் என்றால் அவரை எழுப்ப வேண்டாம். வராதவரை எதிர்பார்த்தும் இருக்க வேண்டாம். இந்த வகையில் குறிப்பிட்ட தேதியில் இரவு வேளையில் தனியாக வீட்டை விட்டு வெளியேறி வழியில் தமது சிறிய தகப்பனார் அப்பாஸ் அவர்களுடன் வந்தார்கள். அப்பாஸ் அவர்கள் அப்போது வரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சிலை வணங்கியாக இருந்தார்கள். ஆனால் அன்னார் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார்கள். அவர் ஹாஷிம் குடும்பத்தின் தலைவராக இருந்தார்கள். ஆக அவ்விருவரும் சேர்ந்து அந்த மலை அடிவாரத்தை வந்து சேர்ந்தார்கள்.

அதிக நேரம் ஆகி இருக்கவில்லை. அன்ஸார்களும் ஒருவர் இருவராக அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களில் 70 பேர் இருந்தார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் அகிய இரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். எல்லோருக்கும் முன் அப்பாஸ் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் அப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.

அவர்கள் கூறினார்கள்: கஸ்ரஜ் கூட்டத்தினரே! ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அன்னாரது குடும்பத்தில் ஒரு மதிப்பும் அன்பும் பெற்ற மனிதர் ஆவார்கள். அவருடைய குடும்பம் அவர்களின் பாதுகாப்பிற்குரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆபத்தின் சந்தர்ப்பதிலும் அது தன்னுடைய நெஞ்சை நீட்டி இருக்கிறது. ஆனால் இப்போது முஹம்மதின் விருப்பம் தன்னுடைய நாட்டை விட்டு விட்டு உங்களோடு வர வேண்டும் என்பதாக இருக்கிறது. நீங்கள் இவரை உங்களோடு அழைத்துச் செல்ல விரும்பினால் இவரை எவ்வாறு பாதுகாப்பீர்கள்?

ஒவ்வொரு எதிரிக்கு முன்பாகவும் உங்களுடைய நெஞ்சை நீட்ட வேண்டியது இருக்கும். அதற்கு நீங்கள் தயார் என்றால் நல்லது. இல்லையென்றால், இப்போதே தெளிவாகக் கூறி விடுங்கள். ஏனென்றால் தெளிவாகப் பேசி விடுவது நல்லது என்று கூறினார்கள்.

பரா பின் மஃரூர் என்ற அன்ஸாரிகளின் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெரியவர் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பெரிய மனிதராக இருந்தார். அவர் கூறினார்: அப்பாஸே! நாங்கள் உங்கள் பேச்சுகளைக் கேட்டோம். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தம்முடைய அருளுக்குரிய நாவினால் கூற வேண்டும் என்றும் எங்களிடம் என்ன பொறுப்பைத் தர விரும்புகின்றார்கள் என்றும் கூற வேண்டும் என்றார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதினார்கள். ஒரு சிறு சொற்பொழிவாற்றினார்கள். இஸ்லாத்தின் போதனைகளைக் கூறினார்கள். அல்லாஹ்வின் உரிமைகளையும், அடியார்களுக்குரிய உரிமைகளையும் விளக்கினார்கள்.

பிறகு கூறினார்கள்: நான் உங்களிடம் உங்கள் உறவினர்களை பாதுகாப்பது போன்று என்னோடும் நடந்து கொள்ள வேண்டும் என்பதே ஆகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பரா பின் மஃரூர் அரபுகளின் வழக்கத்திற்கேற்ப தம்முடைய ஒரு கையின் மீது மறு கையை வைத்து அல்லாஹ்வின் தூதரே! உங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக!

நாங்கள் எங்களுடைய உயிர்களைப் போன்று உங்களைப் பாதுகாப்போம். நாங்கள் வாள்களின் நிழலில் வளர்ந்துள்ளோம் என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போதே, அவர் முடிப்பதற்குள் அங்கு உட்கார்ந்திருந்த அபூல் ஹைஷம் பின் துஹ்யான் என்ற ஒருவர் அவருடைய பேச்சை இடைமறித்து அல்லாஹ்வின் தூதரே! முஸ்லிம்களாகி விட்டால், உங்களுக்கு உதவி செய்தால் எங்களுக்கு மதீனாவினுடைய யூதர்களோடு பழைய தொடர்புகள் முறிந்து விடும். அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்கினால் நீங்கள் எங்களை விட்டு விட்டு உங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பி போய்விடக்கூடாது. இதனால் நாங்கள் அங்கும் இல்லாமல், இங்கும் இல்லாமல் ஆகிவிடக்கூடாதே என்றார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்துக் கொண்டே, இல்லை; இல்லை. அவ்வாறு ஒருபோதும் நடக்காது. உங்கள் இரத்தம் என்னுடைய இரத்தம் ஆகும். உங்களுடைய நண்பர் என்னுடைய நண்பர் ஆவார். உங்கள் எதிரி எனது எதிரி ஆவார் என்று கூறினார்கள்.

அப்பாஸ் பின் உபாதா அன்ஸாரி தன்னுடைய உடனிருந்தவர்கள் மீது பார்வையைச் செலுத்தியவாறு, மக்களே! உங்கள் உடன்படிக்கை என்ன என்பதைப் புரிந்தீர்களா? உங்கள் உடன்படிக்கையின் பொருள் உங்களது ஒவ்வொரு கருப்பிற்கும் சிவப்பிற்கும் எதிராக போரிட நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்க்கின்ற ஒவ்வொருவருக்கு எதிராகவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு தியாகத்திற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

அதற்கு மக்கள், ஆம். நாங்கள் அறிந்துள்ளோம். ஆனால் அல்லாஹ்வின் தூதரே! இதற்குப் பதிலாக எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களுக்கு இறைவனின் சுவர்க்கம் கிடைக்கும். அது எல்லா வெகுமதிகளிலும் சிறந்த வெகுமதியாகும் என்று கூறினார்கள். எனவே அனைவரும் எங்களுக்கு இந்த வியாபாரம் சம்மதம்தான். அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் உங்கள் கைகளை நீட்டுங்கள் என்று கூறினர்.

அன்னார் தம்முடைய அருளுக்குரிய கைகளை நீட்டினார்கள். உயிரைத் தர ஆயத்தமாக இருந்த 70 பேரைக் கொண்ட அந்த ஜமாஅத் தற்காப்பு உடன்படிக்கையில் தம்மையே விற்று விட்டார்கள். இந்த பைஅத்திற்குப் பெயர் இரண்டாவது பைஅத்தே உக்பா ஆகும். இந்த பைஅத் நடந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம், மூஸா (அலை) அவர்கள் தமது சமுதாயத்திலிருந்து 12 கண்காணிப்பாளர்களை தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் மூஸாவின் தரப்பிலிருந்து கண்காணிப்பாளர்களாகவும், பாதுகாவலராகவும் இருந்தார்கள். நானும் உங்களிடம் 12 கண்காணிப்பாளர்களையும், பாதுகாவலர்களையும நிர்ணயிக்க விரும்புகின்றேன். மேலும் நீங்கள் எனக்கு ஈஸாவின் சீடர்களைப் போன்றவர்கள். மேலும் என் முன்னால் உங்களது சமுதாயத்தைக் குறித்துப் பதில் கூறக்கூடியவர்களும் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

ஆகவே நீங்கள் தகுதியுள்ளவர்களின் பெயரை என்னிடம் எடுத்து வையுங்கள் என்றதும் அங்கு 12 நபர்களின் பெயர்கள் வைக்கப்பட்டன. அன்னார் அதை ஒப்புக் கொண்டார்கள். அவர்களை ஒவ்வொரு கோத்திரத்திற்கும் கண்காணிப்பாளராக்கி அவர்களின் கடமைகளை புரிய வைத்தார்கள். சில கோத்திரத்திற்கு அன்னார் இரண்டு இரண்டு கண்காணிப்பாளர்களை நியமித்தார்கள். அன்னார் நியமித்த அந்த கண்காணிப்பாளர்களின் பெயர்கள் இவைகளாகும்.

அஸ்அது பின் ஸராரா, உஸைது பின் ஹுஸைர், அபுல் ஹைஷம் மாலிக் பின் தைஹான், சஅது பின் உபாதா, பரா பின் மஃரூர், அப்தில்லாஹ் பின் ரவாஹா, உபாதா பின் சாமத், சஅது பின் ரபீஃ, ராஃபிஹ் பின் மாலிக், அப்தில்லாஹ் பின் அம்ர் மற்றும் சஅது பின் ஹைஷ்மா (இவரைப் பற்றியே இப்போது எடுத்துக் கூறப்படுகிறது.

இவரும் இந்த கண்காணிப்பாளர்களில் ஒருவராக இருந்தார்) சஅது பின் ஹைஷ்மா மற்றும் முன்ஸர் பின் அம்ரு ஆவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 227–232)

மதீனா ஹிஜ்ரத்தின்போது குபா பள்ளியில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள் என்றும் ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா அவர்களின் வீட்டில் தங்கினார்கள் என்றும் கூறப்பட்டது. ஆனால் அன்னார் அவர்களுடைய வீட்டிலிருந்து மக்களைச் சந்திப்பதற்காக வெளியே வந்தால் சஅது பின் ஹைஷ்மா அவர்களின் வீட்டில் வந்து அமர்வார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லா பின் கஸீர் பக்கம் 215,216 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதலாவது பைஅத்தே உக்பாவிற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைரை மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கு தர்பிய்யத் கொடுப்பதற்காக அனுப்பினார்கள். சில காலத்திற்குப் பிறகு அவர்கள் அன்னாரிடம் ஜுமுஆ தொழுகைக்காக அனுமதி வேண்டினார்கள். அன்னார் அதற்கு அனுமதி வழங்கினார்கள். ஜுமுஆ தொழுகை குறித்து வழிகாட்டல் வழங்கினார்கள். இந்த வழிகாட்டலுக்கேற்ப மதீனாவில் முதல் ஜுமுஆ நடத்தப்பட்டது. அது ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா அவர்களது வீட்டில் நடந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 87,88 மஸ்அபுல் கைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தப்காத்துல் குப்ராவில் உள்ள ஆதாரமாகும்.

ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மாவுக்கு குபாவில் ஒரு கிணறு இருந்தது. அது அல் கர்ஸ் என்று கூறப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் அதிலிருந்து தண்ணீர் குடித்தார்கள். மேலும் அந்த கிணற்றைப் பற்றி இது சுவர்க்கத்தின் சுனைகளில் ஒன்று என்று கூறினார்கள். இதன் தண்ணீர் மிகச் சிறந்ததாகும். அதிலிருந்து மிக சுவையான இனிய நீர் கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு அன்னாரை அந்த கிணற்றின் தண்ணீரால் குளிப்பாட்டப்பட்டது.

ஹஸ்ரத் அலி அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் மரணமடைந்தால் பிஃரே கர்ஸ் என்ற கிணற்றிலிருந்து ஏழு குவளை தண்ணீர் எடுத்து அதில் என்னைக் குளிப்பாட்ட வேண்டும்.

அபூ ஜஃபர் முஹம்மது பின் அலி அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மூன்று முறை குளிப்பாட்டப்பட்டப்பட்டது. தண்ணீர் மற்றும் இலந்தை மரத்தின் இலைகளினால் அவர்கள் அணிந்திருந்த மேலாடையுடனேயே குளிப்பாட்டப்பட்டார்கள். ஆடைகள் கழற்றப்படவில்லை.

ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் அப்பாஸ் மற்றும் ஹஸ்ரத் ஃபஸல் ஆகியோர் குளிப்பாட்டினார்கள். ஓர் அறிவிப்பின்படி உஸாமா பின் ஸைது, ஹஸ்ரத் ஷுக்ரான், ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 2 பக்கம் 214 ஸிக்ர் குஸல் ரஸூலல்லாஹி (ஸல்) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சுனன் இப்னு மாஜா கிதாபுல் ஜனாயிஸ் பாக் மாஜாஅ ஃபீ கஸலுன் நபி (ஸல்) ஹதீஸ் எண் 1468 & சபலுல் ஹுதா வர் ரிஷாத் தொகுதி 7 பக்கம் 229 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

குரைஷிகளின் அநீதியினால் நெருக்கடிக்கு உள்ளாகி மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த பல முஸ்லிம்கள் முதலில் ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா அவர்களின் வீட்டிற்கே வருவார்கள். அங்கேயே தங்குவார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களில் ஒருவர் ஆவார். அங்கு தங்கியவர்களின் பெயர்கள் இவ்வாறாகும்.

ஹஸ்ரத் ஹம்ஸா, ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா, ஹஸ்ரத் அபூ ஹப்ஷா மவ்லி என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமை, ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் மஸ்வூது போன்றவர்கள் ஹிஜ்ரத் செய்யும்போது ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா அவர்களின் வீட்டில் தங்கினர்.

(அத்தப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 6,32,36,112 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது )

சுலைமான் பின் அபான் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காகப் புறப்படும்போது ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா மற்றும் அவருடைய தந்தையார் இருவரும் அன்னாருடன் சேர்ந்து செல்ல விரும்பினார்கள். நபி (ஸல்) அவர்களிடம் தந்தை, மகன் இருவரும் வெளியேற விரும்பினார்கள். அன்னார் அவர்களிடம் உங்கள் இருவரில் ஒருவர்தான் செல்ல முடியும். எனவே இருவரின் பெயரையும் எழுதிச் சீட்டுக் குலுக்கிப் போடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹைஷ்மா தனது மகன் சஅதிடம், நம் இருவரில் ஒருவர்தான் செல்ல முடியும் என்றால் அவர்களைக் கண்காணித்துப் பாதுகாப்பதற்காக நீ பெண்களோடு இருந்து கொள் என்று கூறினார். அதற்கு சஅது, சுவர்க்கத்தை தவிர வேறு எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் நிச்சயமாக உங்களுக்கு முன்னுரிமை தருவேன். ஆனால் நானோ ஷஹாதத்தை விரும்புகிறேன் என்று கூறினார்.

எனவே இருவரது பெயரும் சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டது. ஹஸ்ரத் சஅதின் பெயர் வெளிப்பட்டது. அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு பத்ர் போருக்காகப் புறப்பட்டார். பத்ர் போரில் ஷஹீதும் ஆனார்.

(அல் முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் லில் ஹாகிம் தொகுதி 3 பக்கம் 209 வமன் மனாகிப் சஅது பின் ஹைஸ்மா ஹதீஸ் எண் 4866 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்போது அவரை அம்ரு பின் அப்து என்பவன் ஷஹீதாக்கினான். ஒரு கூற்றின்படி தயீமா பின் அதீ அன்னாரை ஷஹீதாக்கினான் என வருகிறது. தயீமாவை ஹஸ்ரத் ஹம்ஸா பத்ர் போரிலும், அம்ரு பின் அப்துவை ஹஸ்ரத் அலி அகழ் போரிலும் கொன்றார்கள்.

(அஸதுல் காபா ஃபி மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 429 சஅது பின் ஹைஸ்மா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: பத்ர் நாளில் பொழுது விடிந்ததும் முஸ்லிம்கள் (ஓர் அறிவிப்பின்படி) மற்றும் நிராகரிப்பவர்களின் அணிகள் ஒன்றை ஒன்று சந்தித்தன. யுத்தம் ஆரம்பமாகியது. ஒரு மண் திட்டின் மீது ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா ஒரு இணை வைப்பவரோடு சண்டையிட்டுக்

கொண்டிருக்கும்போது அந்த இணை வைப்பவர் சஅதை ஷஹீதாக்கியதை என்று நான் பார்த்தேன். அந்த இணை வைப்பவர் இரும்பால் ஆன கவசம் அணிந்த குதிரையில் அமர்ந்திருந்தார். குதிரையை விட்டுக் கீழே இறங்கினார். என்னை அடையாளங்கண்டு கொண்டார். ஆனால் நான் அவரை அடையாளம் காண முடியவில்லை. அவர் என்னைச் சண்டைக்கு அழைத்தார். நான் அவரிடம் சென்றேன். அவர் முன்னேறி வந்தார். என்மீது தாக்குதல் தொடுக்க வரும்போது நான் சற்று பின்னே தள்ளி நின்றேன்.

எதிரி என் அருகில் வரவும், யுத்த விதிமுறைப்படி உயரத்தில் நிற்காமல் இருப்பதற்காகவும், உயரத்தில் இருந்தால் சண்டையிட முடியாது என்பதால் நான் ஓர் அடி பின்னே கால் வைத்ததும் அபூ தாலிபின் மகனே! ஓடுகிறாயா? என்றார்.

நான் அவரிடம் கூறினேன். இஷ்தரியின் மகன் ஓடி விடுவது என்பது சாத்தியமற்றதாகும். இஷ்தரி என்பது அரபியின் மரபுச் சொல்லாகும். ஏனென்றால் வரலாற்றில் ஒருவர் கூறுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு திருடன் திருடுவதற்காக வந்த பிறகு அவர் மீது மக்கள் தாக்கினால் அவன் ஓடுகிறான். அவன் ஓடுவது தற்காலிகமானதாகும். அவன் விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது திரும்பி வந்து தாக்குதல் தொடுக்கவே செய்வான். ஆகவே பின்வாங்கி விட்டுப் பிறகு தாக்குதல் நடத்துவதற்கு இது ஒரு உதாரணமாக கூறப்படுகிறது.

ஹஸ்ரத் அலி கூறினார்கள்: என்னுடைய அடி சற்று பின் வாங்கியதும் அவரும் என் அருகில் வந்தார். அவர் என்னைத் தாக்கியதும் நான் என்னுடைய கேடயத்தால் அதைத் தாங்கினேன். அவரது தோளின் மீது வேகமாக தாக்குதல் தொடுத்தேன். எனது வாள் அவருடைய கவசத்தைத் துளைத்துக் கொண்டு வெளிப்பட்டு விட்டது. என்னுடைய வாள் அவரை முடித்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அப்போது எனக்கு பின்னால் வாளின் பொலிவு தென்பட்டது. நான் என்னுடைய தலையை உடனே கீழே தாழ்த்தினேன். பின்னாலிருந்து ஒரு வாள் வந்து கொண்டிருந்தது. அந்த வாள் எதிரி மேல் பட்டது. அவரது தலை உடம்பிலிருந்து துண்டாகி விட்டது.

ஹஸ்ரத் அலி கூறுகிறார்: நான் திரும்பிப் பார்த்தபோது ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அவரைப் பார்த்து, எனது சண்டையை, எனது யுத்தத்தை உன்னால் தாங்க முடியுமா? நான் அப்துல் முத்தலிபின் மகனாவேன் என்று கூறினார்கள்.

(கிதாபுல் மகாஸி லில் வாகிதி பக்கம் 92,93 கஸ்வா பத்ர் – 1984 ஆம் ஆண்டு ஆலிமில் குதுபுல் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 431 – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள ஆஸிஃப் பிரிண்டர்ஸில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பிலிருந்து, இன்னார் இன்னாரைக் கொன்றார் என்று கூறப்படவில்லை. மாறாக, இது தான் கூறப்படுகிறது. அதாவது தமீமா பின் அதீ ஹஸ்ரத் சஅதை ஷஹீதாக்கினார். பிறகு அவர் கொல்லப்பட்டார்.

ஓர் அறிவிப்பின்படி, பத்ரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இரண்டு குதிரைகள் இருந்தன. ஒன்றில், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் மற்றும் மற்றொன்றில் ஹஸ்ரத் சஅது பின் ஹைஷ்மா பயணம் செய்தனர். ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் மற்றும் ஹஸ்ரத் மிக்தாது பின் அஸ்வது இருவரும் மாறி மாறி அதில் பயணம் செய்தனர்.

(தலாயிலுல் நுவுப்பத் தொகுதி 3 பக்கம் 110 – 1988 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போரில் முஸ்லிம்களிடம் எத்தனை குதிரைகள் இருந்தன என்பது குறித்து பல்வேறு அறிவிப்புகள் வரலாற்றில் உள்ளன. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களிது கருத்தின்படி, பத்ர் போரில் முஸ்லிம்களிடம் 70 ஒட்டகங்களும், 2 குதிரைகளும் இருந்தன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 353)

ஆனால் இவ்வாறும் எழுதப்பட்டுள்ளது. பிற நூல்களில் குதிரைகளின் எண்ணிக்கை மூன்று என்றும் ஐந்து என்றும் வருகிறது.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 260 பாப் கஸ்வா பத்ருல் குப்ரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 205 பாப் ஸிக்ர் மகாஸிய்யா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் யுத்த தளவாடங்கள் குதிரை மற்றும் மற்றும் ஒட்டகங்கள் அல்லது எண்ணிக்கை ஆகியவை காஃபிர்களின் தளவாடங்கள் மற்றும் குதிரைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது ஒன்றுமே இல்லை. ஆனால் முஸ்லிம்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டது. காஃபிர்கள் தமது எண்ணத்தில் இஸ்லாத்தை அழித்து விடலாம் என்று வந்தனர்.

பிறகு நம்பிக்கையாளர்கள் தம்முடைய பொருள்களைப் பார்க்கவில்லை. குதிரையையும் பார்க்கவில்லை. மாறாக, அல்லாஹ்வுக்காக தியாகம் செய்யும் துடிப்பில் வந்தனர். அவர்களுடைய பதிலிருந்தே அது வெளிப்படுகிறது.

எந்தவொரு உலகியல் பொருட்களின் ஆசையிலும் அவர்கள் வரவில்லை என்பதை அவர்களது பதில்கள் வெளிப்படுத்தின. அல்லாஹ்விற்காகத் தியாகம் செய்வது மட்டுமே அவர்களது நோக்கமாக இருந்தது.

எனவேதான் மகன் தந்தையிடம் இந்த இடத்தில் மட்டும் நான் உங்களுக்கு முன்னுரிமை தர முடியாது என்று கூறினார். எவ்வாறிருப்பினும் அவர்களிடத்தில் ஒரு துடிப்பு இருந்தது. அல்லாஹ் அதை ஏற்றுக் கொண்டான். வெற்றியை வழங்கினான்.

அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

## *ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களிலிருந்து.....*

என்னுடைய பேருபகாரியே! எனது இறைவனே! நான் உனது ஒன்றுமற்ற அடியானாகவும், பாவம் செய்த மற்றும் கவனமற்ற அடியானாகவும் இருக்கின்றேன். நான் அநீதிக்கு மேல் அநீதி இழைத்துக் கொண்டிருப்பதை நீ பார்த்தாய். அவ்வாறிருந்தும் என்மீது அருளுக்கு மேல் அருள் புரிந்தாய். மேலும் நான் பாவத்திற்கு மேல் பாவம் செய்வதைப் பார்த்தாய். மேலும் என்மீது கருணைக்கு மேல் கருணை காட்டினாய். நீ எப்போதும் எனது பாவங்களை மறைக்கவே செய்தாய். மேலும் உனது எண்ணற்ற அருள்களிலிருந்து எனக்கு வழங்கினாய்.

எனவே இப்போதும் ஒன்றுமற்ற மற்றும் பாவியான என்மீது கருணை காட்டுவாயாக. எனது வெட்கமற்ற நிலையையும், எனது நன்றிகேட்டையும் மன்னிப்பாயாக. மேலும் என் கவலையிலிருந்து எனக்கு விடுதலை அளிப்பாயாக. உன்னைத்தவிர வேறு யாராலும் அதை அகற்ற முடியாது. ஆமீன்.

(மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 2 பக்கம் 10, முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா ஹகீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம், கடிதம் எண் 2)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இது மூன்று நிமிடத்தில் நின்று விட்டதே! மழை நின்றது மட்டுமல்லாமல் மேகமும் காணாமல் போய் விட்டதே! என்று கூறி வியப்படைந்தார்கள்.

2008–ஆம் ஆண்டு சூழ்நிலையின் காரணமாக காதியான் ஆண்டு மாநாடு டிசம்பரில் அதன் குறிப்பிட்ட தேதிகளில் நடக்க முடியாமல் போனது. இது 2009–ஆம் ஆண்டு மே மாதம் 25,25,27 ஆகிய தேதிகளில் நடந்தது. கடைசி நாளில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் நிறைவு உரை நடைபெற வேண்டியதிருந்தது.

மே மாதம் பஞ்சாபில் தூசியுடன் கூடிய கடும் காற்று வீசும் மாதமாகும். இறுதி அமர்வு தொடங்கியதும் கடும் காற்று வீசத் தொடங்கியது. கடும் காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையமும் அறிவித்திருந்தது. மாநாட்டுத் திடலில் அஹ்மதிகளைத் தவிர இந்து, சீக்கிய மற்றும் கிருஸ்தவ சகோதரர்களும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உரையைக் கேட்பதற்காக ஒன்று கூடியிருந்தனர்.

காற்று வேகமெடுத்துக் கொண்டிருந்தது. மாநாட்டுத் திடலின் எல்லாப் பொருட்களையும் காற்று வீசி எறிந்து விடும் என்று தோன்றியது. மின்சாரம் மற்றும் MTA வின் ஏற்பாடுகளில் இடையூறு ஏற்படுமோ என்ற அச்சம் உருவானது. இங்கிருந்த அனைத்து சூழ்நிலைகளையும் விவரித்து, சாதகமான நிலை ஏற்பட ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆச் செய்யும்படி விண்ணப்பித்து கடிதம் எழுதப்பட்டது.

திலாவத் மற்றும் நஸ்ம் முடிந்த பின்னர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தம் உரையின் தொடக்கத்தில் ''தற்போது காதியானிலிருந்து தகவல் வந்துள்ளது. அங்கு பலத்த காற்று வீசுகிறது. மாநாடு சிறந்த முறையில் முடிவடைவதற்காக துஆச் செய்யுங்கள்'' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இந்த துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். இரண்டு மூன்று நிமிடங்களில் காற்று நின்று விட்டது. வெப்பமாக இருந்த சீதோஷ்ண நிலை இதமாக மாறியது. மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உரையைக் கேட்டனர்.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நம்மவர்கள் மட்டுமின்றி இந்து மற்றும் சீக்கிய சகோதரர்களும் கூட இது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளமாகும் என்று ஏற்றுக் கொண்டார்கள்.

இதற்குப் பிறகு இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய கே.தாரிக் அஹ்மது சாஹிப் (சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்முதிய்யா, பாரத்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்களது சொற்பொழிவின் தலைப்பு, விகிதாச்சார அடிப்படையில் சந்தா கொடுப்பதும், வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் என்பதாகும்.

அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: மனிதனுக்கு இவ்வுலகை விட்டுச் செல்லும் நேரம் வரும்பபோது, அந்தோ! வாழ்க்கை தனக்கு மேலும் அவகாசம் வழங்கினால் அல்லாஹ்வின் பாதையில் தனது விருப்பத்திற்குரிய பொருளை அளவில்லாமல் வழங்க ஆயத்தமாகி விடுவேனே என்ற உணர்வு அவனைக் கண்டிப்பாக நிம்மதியிழக்கச் செய்கிறது. மேலும் தன்னிடம் உள்ள அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் வழங்கி விடுகின்றான். எப்படியாவது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்று விட வேண்டும் என விருப்பம் கொள்கின்றான்.

மனிதனுக்கு அவனது கடைசி நேரத்தில் இறைவழியில் செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏன் நினைவுக்கு வருகிறது என்ற இந்த கேள்வி இந்த இடத்தில் மிக முக்கியமானதாகும். இறைவிருப்பத்தைப் பெறுவதற்கு மிகச்சிறந்த மற்றும் பயன்தரக்கூடிய விஷயம் அல்லாஹ்வின் பாதையில் தனது செல்வங்களை தியாகம் செய்வதுதான் என திடீரென்று ஏன் தெரிய வருகிறது? இதில் உள்ள இரகசியம் என்ன?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதனுடைய இந்த நிலையை படம்பிடித்துக் காட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த சதகாவில் அதிக நன்மையுள்ளது என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நல்ல உடல்நடத்துடன் இருக்கும்போது கருமித்தனம் கொண்ட போதிலும் வழங்கும் சகக்காவில்தான் அதிக நன்மை இருக்கிறது என்று கூறினார்கள்.

அதாவது உங்களை ஒருபுறம் வறுமையின் பயமும், மறுபுறம் செல்வந்தராக வேண்டும் என்ற எண்ணமும் இருக்கும்போது (இந்த சதகாவில்) உங்களுக்கு சோம்பேறித்தனம் ஏற்படக் கூடாது. மூச்சு தொண்டைக்கு வந்த பின்னர் அந்த நேரத்தில் நீங்கள் அவருக்கு இவ்வளவு, இவருக்கு இவ்வளவு எனக் கூறினால் எந்தப் பலனுமில்லை. ஏனென்றால் (அந்த செல்வமாகிய) அது அவருக்குரியதாக ஏற்கனவே ஆகிவிட்டது. (புகாரி, கிதாவுஸ் ஸக்காத்)

ஆக, நற்கூலிக்குரிய மனிதரே நற்பேறு பெற்றவர் ஆவார். அல்லாஹ் அவருக்கு உடல்நலம் வழங்கியிருந்த காலத்தில் அவருக்கு வாய்ப்பளித்த அதே நேரத்தில் தனது முடிவு நல்லதாக அமைவதற்கு பொருளாதார விஷயத்தில் அல்லாஹ்வுடன் தனது கணக்கைச் சரியாக வைக்கின்றார். இல்லையென்றால் திருக்குர்ஆன் கூறுவதைப் போன்று மரணத் தருவாயில் பொருள் தியாகம் செய்வது தொடர்பாகக் கவலைப்படுவது இழப்பிற்குரியவர்களின் செயலாகும். அது தன்னைத் தானே அழிவில் ஆழ்த்திக் கொள்வதாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது முழு வாழ்வின் அனுபவம் என்னவென்றால், எவர் பொருள் தியாகம் செய்யும் விஷயத்தில் இறைவனுடன் சரியான நிலையைக் கையாள மாட்டாரோ, தனது செல்வத்திலிருந்து இறையச்சத்துடன் அல்லாஹ் மற்றும் அவனது மார்க்கத்தின் பங்கைத் தனியாக எடுத்து வைக்க மாட்டாரோ அவர்களது ஏனைய விஷயங்களும் சீர்கெட்டு விடும். வீட்டின் நிம்மதி அழிந்து போகும். வியாபாரத்தில் இழப்பு ஏற்பட ஆரம்பிக்கும். சந்ததிகளின் தர்பிய்யத்திலும் சீர்கேடு வந்து விடும். மேலும் பொதுவாக மனிதனின் வாழ்விலிருந்து அருள் போய்விடும்.

(மாலி நிஸாம் தொகுதி **1** பக்கம் **96**)

வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் புறமிருந்து தோன்றிய இமாம் மஹ்தி (அலை) அவர்கள் புதிய அமைப்பின் அடித்தளத்தை 1905–ஆம்

ஆண்டு நிறுவினார்கள். அதை அல் வஸிய்யத் திட்டத்தின் மூலம் வைத்தார்கள். இஸ்லாமிய அரசு அனைத்து உலகத்திற்கும் உணவளிக்க வேண்டுமென்றால், அனைத்துலகிற்கும் ஆடை வழங்க வேண்டுமென்றால், அனைத்து உலகிற்கும் வாழ்வதற்கு வீட்டிற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றால், அனைத்துலகின் அறிவின்மையை அகற்றுவதற்காகக் கல்விக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக அரசிடம் இதற்காக அதிகமான பணம் இருக்க வேண்டும்.

இந்த வகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இந்த அறிவிப்பைச் செய்தார்கள். அதாவது இந்த காலத்தில் இறைவன் உண்மையான சொர்க்கத்தைப் பெற விரும்பும் மக்களுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளான். அவர்கள் மகிழ்ச்சியுடன் தனது செல்வத்திலிருந்து குறைந்தபட்சமாக பத்தில் ஒரு பகுதியையும் அதிகபட்சமாக மூன்றில் ஒரு பகுதியை வஸிய்யத் செய்ய வேண்டும். இந்த புதிய அமைப்பின் அடித்தளம் 1910 ரஷ்யாவில் வைக்கப்பட்டதல்ல.

அதேபோல் இனி வருங்காலத்தில் ஏதாவது ஒரு வருடத்தில் தற்போதைய போருக்குப் பிறகு ஐரோப்பில் வைக்கப்படப்போவதுமில்லை. மாறாக, உலகிற்கு நிம்மதியளிக்கக் கூடியவரும் ஒவ்வொரு மனிதரின் வாழ்வை மகிழ்ச்சியாக ஆக்கக் கூடியவரும் இதனுடன் மார்க்கத்தைப் பாதுகாக்கக் கூடியவர் மூலமாக புதிய அமைப்பின் அடித்தளம் 1905–ஆம் ஆண்டு காதியானில் அமைக்கப்பட்டு விட்டது. தற்போது உலகிற்கு வேறெந்த புதிய அமைப்பின் தேவையுமில்லை. (மாலி நிஸாம் பக்கம் 40,41)

இப்படிப்பட்ட அருளுக்குரிய அமைப்பில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினை அல்லாஹ் தனது அருளால் நமக்கு வழங்கியிருப்பது நமது நற்பேறு ஆகும். நாம் நஹ்னு அன்ஸாருல்லாஹ் – அல்லாஹ்வின் உதவியாளர்கள் என வாதம் செய்து விட்டு இவ்வளவு சிறந்த கூட்டத்தில் பங்கு பெறாமல் இருந்து நமது வாதத்தையே தவறான என நிரூபிக்க வேண்டுமா என்ன? அது எந்த அளவுக்கு இறைவனுக்கு மதிப்பை வழங்காத நிலையாக இருக்கும்? இது நமது வாதத்தினைப் பொய்ப்படுத்தக் கூடியதாகும்.

வஸிய்யத் அமைப்பில் இணைவது எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்களிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிய வரும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நம்பிக்கையாளர்களின் ஈமானின் சோதனை இதில்தான் இருக்கின்றது. அவர் இந்த அமைப்பில் இணைய வேண்டும். மேலும் இறைவனது சிறப்பான அருளைப் பெற வேண்டும். நயவஞ்சகர் மட்டும்தான் இந்த அமைப்பிலிருந்து விலகியிருப்பார். இது எவர் மீதும் கட்டாயமில்லை.

ஆனால் அத்துடன், இதில் உங்களது நம்பிக்கையில் ஒரு சோதனை. இந்த தியாகத்தைச் செய்வது உங்களுக்கு அவசியமாகும். உங்கள் உள்ளத்தில் சொர்க்கத்தின் கண்ணியமும் மகத்துவமும் இல்லை என்றால் பிறகு உங்கள் செல்வத்தை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு உங்கள் செல்வத்தின் எந்தத் தேவையுமில்லை.'' (மாலி நிஸாம் பக்கம் 42)

மேலும் ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: ''வஸிய்யத் அமைப்பு முழுமையடையும்போது இதன் மூலம் தப்லீக் மட்டும் நடைபெறாது. மாறாக, இஸ்லாத்தின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு நபருடைய தேவையும் இதன் மூலம் நிறைவேற்றப்படும். கஷ்டமும் வறுமையும் உலகிலிருந்து துடைத்தெறியப்படும் – இன்ஷா அல்லாஹ். அனாதைகள் யாசிக்க மாட்டார்கள். விதவை மக்களிடத்தில் கையேந்த மாட்டார். வசதியற்றவர் கஷ்டத்துடன் திரிய மாட்டார். ஏனென்றால் வஸிய்யத் குழந்தைகளின் தாயாக இருக்கும். இளைஞர்களுக்குத் தந்தையாக இருக்கும். பெண்களுக்குக் கணவனாக இருக்கும். கட்டாயப்படுத்தாமல் அன்பு மற்றும் உள்ளத்தின் மகிழ்ச்சியுடன் ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருக்கு இதன்மூலம் உதவி செய்வார். அவர் கொடுப்பது பிரிதிபலனை எதிர்பார்த்து இருக்காது.

மாறாக, கொடுக்ககூடிய ஒவ்வொருவரும் இறைவனிடத்தில் சிறந்த பிரதிபலனைப் பெறுவார்கள். வசதி படைத்தவரும் இழப்பில் இருக்க மாட்டார். எந்த ஏழையும் இழப்பில் இருக்க மாட்டார். எந்த சமுதாயமும் மற்ற சமுதாயத்துடன் சண்டையிடாது. மாறாக, அதன் கருணை உலகம் அனைத்திலும் பரந்திருக்கும். ஆகையால் நீங்கள் மிக விரைவாக வஸிய்யத் செய்யுங்கள். இதன் மூலம் புதிய அமைப்பு அமைக்கப்பட வேண்டும். மேலும் நாலா புறமும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் கொடி பறக்கக்கூடிய அந்த அருளுக்குரிய நாள் வர வேண்டும்.

நான் இதனுடன் வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ள சகோதரர்களுக்கு வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறேன். மேலும் நான் தற்போது வரை வஸிய்யத் அமைப்பில் இணையாத மக்களுக்கு அவர்களும் இதில் இணைந்து உலக மற்றும் மார்க்க அருள்களிலிருந்து பங்கு பெற்று செல்வந்தர்களாக ஆக அல்லாஹ் வாய்ப்பளிப்பதற்காக துஆ செய்கின்றேன்.''

(மாலி நிஸாம் பக்கம் 42)

அறிமுக சொற்பொழிவு மற்றும் நற்தாக்கங்கள்

மதிப்பிற்குரிய ஹாபிஸ் நைஜீரியாவின் முபல்லிக் அப்துல் கனி சாஹிப் அவர்கள் தமது நற்தாக்கங்களை எடுத்துக் கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: 9 நபர்களைக் கொண்ட எங்களது குழு 26 டிசம்பர் அன்று நைஜீரியாவிலிருந்து புறப்பட்டது. டிசம்பர் 27 ஆம் தேதி காதியான் வந்தடைந்தோம். நான் இதற்கு முன்பும் பல முறை காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். ஒவ்வொரு முறையும் மிகச் சிறந்த அனுபவம் கிடைக்கிறது.

காதியானில் அருளுக்குரிய இடங்களான மஸ்ஜிது அக்ஸா, மஸ்ஜிது முபாரக், மினாரத்துல் மஸீஹ், பெஹஷ்தி மக்பரா மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கல்லறை போன்றவற்றை பார்ப்பதற்காகச் செல்கின்றபோது வியக்கத்தக்க நிலைமைகள் ஏற்படுகின்றன. குழுவில் என்னுடன் வந்துள்ளவர்களுக்கு முதல் முறையாக காதியான் வருவதற்கான நற்பேறு கிடைத்துள்ளது. அனைவருமே முதன் முறையாகக் காதியானைப் பார்த்ததில் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். மேலும் அவர்கள் காதியானின் ஆன்மீக அருட்களிலிருந்து பயனடைகின்றனர். தொண்டு செய்யகின்ற அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்க்கவில்லை என்றாலும் அன்னாரது முன்னறிவிப்பிற்கேற்ப அன்னாரது இரண்டாவது வல்லமையின் தோற்றமாகத் திகழ்கின்ற கலீஃபாக்களை கண்டுள்ளோம்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 2008 ஆம் ஆண்டு நைஜீரியா வந்தபோது நமது ஒரு முஅல்லிம் சாஹிப் அவர்கள் தமது குடும்பத்துடன் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கச் சென்றார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள், நீங்கள் தூக்கி வைத்துள்ள இந்த குழந்தையின் வயது என்ன? என்று கேட்டார்கள். பெற்றோர்களால்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 18 April 2019 Issue No. 16

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

அந்தக் குழந்தையின் வயதைக் கூற முடியவில்லை. அதற்கு ஹுஸூர் அவர்கள், இன்று உங்களது குழந்தை இரண்டு வயதை அடைந்து விட்டது என்று கூறினார்கள்.

ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு வீட்டிற்கு திரும்பியதும் எதற்காகவோ அந்தக் குழந்தைக்குப் பிறப்புச் சான்றிதழ் தேவைப்பட்டது. அப்போது அவர்களது வியப்பிற்கு அளவே இல்லாமல் இருந்தது. ஏனென்றால் எந்த நாளில் ஹுஸூர் அவர்களைச் சந்திப்பதற்கான நற்பாக்கியத்தை இவர்கள் பெற்றோர்களோ அந்த நாளில்தான் குழந்தைக்கு வயது இரண்டாக ஆகியிருந்தது.

எந்த நோக்கத்திற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலம் இந்த ஜமாஅத்தை நிறுவினானோ அந்த நோக்கத்தை நான் அடைவதற்கும் மேலும் கிலாஃபத்தோடு உண்மையான முறையில் தொடர்பை வைத்திருப்பதற்கும் அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக.

அமீரின் மூன்றாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஹாபிஸ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் (ரப்வாவின் உள்ளூர் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத்) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்களின் வாழ்க்கை என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழைப்பின் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பேற்றை பெற்றார்கள். அதற்குப் பிறகு அவர்களது மூத்த சகோதரர் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் அவர்களது தந்தை அபூதாலிப் அவர்களின் கட்டளையின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் தனது சகோதரருக்கு ஒத்துழைத்தவாறு முதன்முறையாகத் தொழுதபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை 'ஸுல் ஜனாஹைன்' (இரு இறக்கைகளைக் கொண்டவர்) என்றும் 'தய்யார்' (பறவை) என்ற பட்டப் பெயரால் அழைத்தவாறு அல்லாஹ் உங்களுக்கு இரண்டு இறக்கைகளை வழங்கியுள்ளான். அவற்றுடன் நீங்கள் சுவர்க்கத்தில் பறப்பீர்கள் என்று நற்செய்தி கூறினார்கள்.

(அல் அக்மாலு ஃபீ அஸ்மாயிர் ரிஜால் பக்கம் 170–170)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா இடம்பெயர்ந்து சென்ற பிறகு நிலைமைகள் சற்று சரியானபோது ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் அபிசீனியாவில் தமது வீடு மற்றும் இருப்பிடத்தை விட்டு விட்டு மதீனாவை நோக்கி இரண்டாவது முறையாக இடம்பெயர்ந்து செல்லும் நற்பேற்றைப் பெற்றார்கள். ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களுடன் அபிசீனியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றவர்களின் குழு கைபர் வெற்றிக்குப் பிறகு உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்தது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு தமது முஹாஜிர் சகோதரர்கள் தமது நாட்டுக்கு திரும்பி வந்ததனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே முன்னால் வந்து ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை வரவேற்றார்கள். நேசத்துடன் கட்டித் தழுவினார்கள். அன்பின் மிகுதியால் அவர்களுடைய நெற்றியை முத்தமிட்டார்கள். மேலும், இன்று நான் எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றால் கைபர் வெற்றி பெரிதா? அல்லது ஜஃபர் (ரலி) மற்றும் அவர்கள் தமது தோழர்களுடன் திரும்பி வந்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சி பெரிதா? என்று என்னால் கூற முடியாது என்று கூறினார்கள்.

(இப்னு சஅது தொகுதி 4 பக்கம் 123)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்றிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களைத் தனது சிறப்பான ஆலோசகர்களைச் சேர்ந்தவராக ஆக்கி விட்டார்கள்.

அபீசீனியாவிலிருந்து திரும்பி ஓர் ஆண்டு கூட கழிந்திருக்கவில்லை. ரோமாபுரி மன்னரின் கீழுள்ள கஸானியர்களின் அதிகாரி, பஸ்ராவை நோக்கிச் சென்று கொண்டிருந்த முஸ்லிம் தூதுவரைக் கொலை செய்து விட்டார். இது முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கான அறிவிப்பாக இருந்தது. இதற்கான எதிர்நடவடிக்கைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூவாயிரம் பேரைக் கொண்ட இஸ்லாமிய படையை ஆயத்தம் செய்தார்கள்.

அதில் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்த பல சஹாபிகள் கலந்து கொண்டாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களை அந்தப் படைக்கு தளபதியாக நியமித்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஸைது பின் ஸாரிஸ் (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டால் படைத் தளபதியாக ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் இருப்பார்கள் என்றும் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் இருப்பார்கள் என்றும் அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் இந்தப் போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*


### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.


### திருக்குர்ஆனிலிருந்து....

நிச்சயமாக அல்லாஹ் தண்டனை கொடுப்பதில் கடினமானவன் என்பதையும், மேலும் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (5:99)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad